06.03.2025    அசல் வழக்கு எண்.89/2013

வா.சா.1    திரு.அப்துல் முனாப் த/பெ._சையத் ஜானி பாஷா

சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

எனது தாயார் வாங்கிய சொத்து செட்டில்மெண்ட் மூலமாக எனக்கு கிடைக்கப்பெற்ற சொத்திற்கும் நான் தனிப்பட்ட முறையில் கிரயம் பெற்ற சொத்திற்கும் வட்டாட்சியர் பட்டா வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மூன்று கிரய ஆவணங்களின்படி எனது தாயார் 6274 சதுரடி சொத்து வாங்கியுள்ளார் என்றால் 5710 சதுரடி சொத்து வாங்கியுள்ளார். எனது தாயார் கிரயம் பெற்ற சர்வே எண்.406/1, 406/2-ல் உள்ள சொத்துக்களை தவிர வேறு எதுவும் சொத்து எனது தாயாருக்கு உரிமையில்லை என்றால் சரிதான். எனது தாயார் வா.த.சா.ஆ.4 ஆவணம் முன்னிலைக்கு எனக்கு 9206.5.1/3 சதுரடி செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளார் என்றால் 5710 சதுரடி செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார். வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் நான் குறிப்பிட்டுள்ள 5710 சதுரடிக்கு மேல் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். எனது தாயார் 6274 சதுரடி சொத்தை தான் கிரயம் வாங்கினார் என்றாலும், ஆனால் கூடுதலாக 2932 சதுரடி சொத்துக்களை சேர்த்து செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றாலும், நானும் எனது தாயாரும் மோசடியாக வா.த.சா.ஆ.4 ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நான் கிரயம் வாங்கிய சொத்து 2491 சதுரடி என்றால் சரிதான். 1990ஆம் ஆண்டு 448 சதுரடி சொத்தையும் தனியாக கிரயம் வாங்கியுள்ளேன். 448 சதுரடி சொத்து சம்பந்தமான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் எனக்கு 26.82 சென்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.37 பட்டாவானது சர்வேயர் நிலத்தை அளந்து பார்த்து பின்னர் எனக்கு வழங்கிய பட்டா என்றால் சரிதான். நில அளவையர் இடத்தை அளந்ததற்கான சான்று வழங்கியிருப்பார் என்றாலும் அந்த சான்றை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.37 பட்டாவானது 29.73 சென்ட்டுக்காக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு உண்மையிலேயே 26.82 சென்ட் இடம் தான் சொந்தம் என்றாலும், என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி நகராட்சியினர் மூலம் 29.73 சென்ட் இடத்திற்கு சேர்த்து பட்டா வாங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது தாயார் எனக்கு கூடுதலான அளவுகளை குறிப்பிட்டு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் அந்த ஆவணம் செல்லாது என்றும், அந்த ஆவணத்தில் கூடுதலாக குறிப்பிட்டுள்ள இடம் குறித்து பாகப்பிரிவினை கோரியும் பிரதிவாதிகள் மாண்பமை சார்பு நீதிமன்றம் வந்தவாசியில் அசல் வழக்கு எண்.228/2024 என்ற வழக்கை தாக்கல்

செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் எனது தாயார் கூடுதலாக எனக்கு எழுதி வைத்த இடத்தை தவறான நோக்கத்துடன் எனது சுய இலாபத்திற்காக சொந்தமாக்கி கொள்வதற்காக தவறான சங்கதிகள் உடன் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா எ அட்டவனை சொத்தில் வடபுறத்தில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றாலும், நான் ரியாசத் அலி வகையறாவிடமிருந்து கிரயம் வாங்கிய பகுதியின் வடபுறம் கிரயம் வாங்காமல் விட்ட பகுதியில் பிரதிவாதிகள் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. அது ரோடு புறம்போக்கு ஆகும். எனக்கு உரிமையில்லாத சொத்திற்கு எனது செல்வாக்கை பயன்படுத்தி பட்டா பெற்றுக்கொண்டு பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் இருந்து அவர்களை வெளியேற்றுவதற்காக இந்த தாவாவை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாரின்பேரில் நகராட்சி நிர்வாகத்தினர் ஆக்ரமிப்புகளை அகற்றி தற்போது வேலி அமைத்து நான் அதில் இருந்து வருகிறேன் என்றாலும், தவறாக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ஒரு பகுதி ஆக்ரமிப்பை தான் அவர்கள் அகற்றினார்கள். அவ்வாறு ஒரு பகுதி ஆக்ரமிப்பை அகற்றியிருந்தால் நான் மாவட்ட ஆட்சியரிடம் எனது புகார் சம்பந்தமாக மேல்முறையீடு செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு ஆட்சேபனை செய்யாமல் இருந்திருப்பதிலேயே நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. அரசுக்கு சொந்தமான நிலத்தில் பட்டா வழங்குவது அரசின் முடிவு என்றாலும் அதில் நான் ஆட்சேபனை செய்ய முடியாது என்றாலும் சரியல்ல. என்னுடைய இடத்திற்கு தான் ஆட்சேபனை செய்கிறேன்.

ஒம்/-ஆர்.பாக்யராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி (மு.கூ.பொ)